சார்பு நீதிமன்றம், அவிநாசி

ஓ.எஸ்.எண்.390/2016, நாள்: 22.07.2019

பி.வா.சா.1, முத்துசாமி, குறுக்கு விசாரணை வாதி தரப்பில்:

19.07.1954 ல் நான் பிறந்தேன். அ.வ.எண்.19/2004 முன்சீப் கோர்ட், அவிநாசி என்ற வழக்கில் உள்ள வழக்குரையை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.19/2004 ல் இந்த வழக்கின் வாதி தரப்பினராக இல்லை என்றால் ஆமாம். அ.வ.எண்.19/2004 ல் 1918 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மற்றும் இந்த வழக்கு தாக்கல் செய்த தேதி வரை தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ல் 07.11.1966 ல் தாவா சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் தாசில்தார், கோபி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் தெரியாது. அ.வ.எண்.19/2004 ல் 1918 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை தாவா சொத்திற்குண்டான அடங்கல் பதிவேட்டை அந்த வழக்கில் முன்னிலைப் படுத்தவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.19/2004 ல் 1918 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை தாவா சொத்திற்குண்டான சிட்டாவை அந்த வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் அம்மாசைகுட்டி என்பவர் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அ.வ.எண்.19/2004 ல் அம்மாசைக்குட்டி தரப்பினரா என்றால் சரிதான். இந்த வழக்கில் அம்மாசைகுட்டி 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதியின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்.முத்துசாமி

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

-Sd-S.Prabha Chandran-
Sub Judge,
*Avinashi.*